بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 30, May 2014 (Tamil)**

## டாக்டர் மஹ்தி அலி கமர் சாஹிப் ஷஹீதான சம்பவம்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள்கூறினார்கள்:**

அல்லாஹ் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை ஒரே சரடில் கோர்த்திருப்பது அவனது மாபெரும் அருளாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு தொடரும் அமைப்பு கிலாஃபத் ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னார் அல்வஸிய்யத் என்ற தமது நூலில் குறிப்பிட்டிருந்தது போன்று, ஜமாஅத் உறுப்பினர்கள் முழுமையாகக் கட்டுப்பட்டவாறு கிலாஃபத் அமைப்பை ஏற்றுக் கொண்டார்கள் என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சென்ற 106 ஆண்டு கால வரலாறு சாட்சியாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தஸ்தையும், தகுதியையும் புரிந்திருக்கின்ற ஜமாஅத் எந்நிலையிலும் கிலாஃபத்துடன் சேர்ந்திருப்பதுதான் உண்மையான நோக்கமாகும்; இதிலேயே ஜமாஅத்தின் ஒற்றுமை இருக்கிறது; இதிலேயே ஜமாஅத்தின் முன்னேற்றம் இருக்கிறது; இதிலேயே இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுப்பதற்கான ஆற்றல் நம்மிடம் உருவாகிறது என்பதையும் புரிந்துள்ளது. நமது கவனம் துஆக்களின் பக்கம் திரும்பும் என்றால், நமது பார்வை ஓர் இறை கொள்கையை புரிவதன் பக்கம் செல்லுமென்றால், அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் வாக்குறுதியளித்த அந்த இறையருள்களுக்கு நம்மில் ஒவ்வொருவரும் வாரிசாவார்.

நான் சென்ற பேருரையிலும், ஒவ்வொரு கஷ்டமான, துன்பமான நேரத்திலும் நாம் இறைவன் முன்னால் குனிய வேண்டும் என்றும், உலக போராட்ட வழிமுறையுடன் நமக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் கூறியிருந்தேன். கிலாஃபத்துடன் இணைந்திருந்து அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்கின்றவர்களுக்காக, துன்பங்களிலிருந்து விடுதலை பெறுகின்றவர்களுக்காக அல்லாஹ் துஆக்களின் பக்கம் - இறைவணக்கங்களின் பக்கம் கவனமூட்டி இருக்கின்றான் எனக் குறிப்பிட்டிருந்தேன். எனவே இதுவே நமது உண்மையான ஆயுதமாகும். இதிலேயே நாம் முழுமையான நிரந்தரமான நம்பிக்கை வைக்க முடியும். துஆக்களின் ஆயுதங்களை விட்டு விட்டு நாம் சின்னச் சின்ன, தற்காலிகமான ஆயுதங்களின் பக்கம் நாம் பார்ப்போமென்றால், நமக்கு வெற்றி கிடைக்க முடியாது. சிறிய ஆயுதங்களால் எவருக்கும் வெற்றி கிடைக்கவில்லை; கிடைப்பதுமில்லை. நபிமார்களின் வாழ்க்கையில் கிடைத்த வெற்றிகள் என்பது இந்த துஆக்களின் மூலமாகவே கிடைத்ததாக நாம் காண்கிறோம். மேலும் குறிப்பாக நாம் இஸ்லாத்தின் வரலாற்றை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் - கிலாஃபத்தே ராஷிதாவின் காலத்தைப் பார்க்கும்போது வெற்றிகள் உலக ஆற்றல்களினால் கிடைக்கவில்லை; மாறாக அல்லாஹ்வின் அருளினாலேயே கிடைத்தன; அல்லாஹ்வின் வாக்குறுதிகளுக்கேற்ப வெற்றிகள் கிடைத்தன என்பதைக் காண முடிகிறது. ஆனால் எல்லா வாக்குறுதிகள் இருந்தும் அந்த வெற்றிகளைப் பெறுவதற்கு உயிரை தியாகம் செய்ய வேண்டியது வந்தது; இறை வணக்கத்தின் தகுதியை உயர்த்த வேண்டியதும் வந்தது என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். அல்லாஹ் இதன் பக்கம் நமக்கு கவனமூட்டியவாறு, فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ (*ஃபஸல்லி லிரப்பிக வன்ஹர்* )எனக் கூறுகிறான். அதாவது, நீர் உமது இறைவனை வணக்கிக் கொண்டே செல்வீராக; அதற்காக தியாகங்களை செய்து கொண்டே செல்வீராக. *(திருக்குர்ஆன் 108:3).* பிறகு இந்த இறைவணக்கங்கள் - தியாகங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு உங்களை வாரிசாக்கும். நீண்ட கால கஷ்டங்கள், துன்பங்கள், சோதனைகள் மனிதனை நிம்மதியிழக்கச் செய்து விடுகின்றன என்பது மனித இயல்பில் உள்ள ஒன்றாகும்

என்பதிலும் எந்த சந்தேகமும் இல்லை. அத்தகைய சூழ்நிலையில் இறைதூதரும், நம்பிக்கையாளர்களும் مَتٰی نَصۡرُ اللّٰهِ *(மதா நஸ்ருல்லாஹ்* அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்?) என்ற குரலை எழுப்புகின்றனர்.(2:215) அமைதியிழந்தவாறு அவர்களின் உள்ளங்களிலிருந்து இந்தக் குரல் எழுகிறது. அது நம்பிக்கையிழப்பின் காரணமாக அல்ல; மாறாக, அல்லாஹ்வின் கருணையை வெளிப்படுத்தச் செய்வதற்காக, அவனது அருளைப் பெறுவதற்காக தம்மைத்தாமே அல்லாஹ்வின் மடியில் விழவைத்தவாறு - துஆக்களை அதன் உச்ச எல்லை வரை சென்றடைய வைத்தவாறு தியாகங்களின் தகுதிகளை நிலைநாட்டியவாறு - இந்தக் குரலை அவர்கள் எழுப்பிகின்றனர். அப்போது அல்லாஹ்விடமிருந்து, اَلَاۤ اِنَّ نَصۡرَ اللّٰهِ قَرِیۡبٌ *(அலா இன்ன நஸ்ரல்லாஹி கரீப்* கேட்டுக்கொள்ளுங்கள்: அல்லாஹ்வின் உதவி அண்மையில் உள்ளது) என்ற குரல் வருகிறது. அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமும் இதைத்தான் கூறியிருக்கிறான். பல நேரங்களில் அவர்கள் அல்லாஹ்வின் உதவி நெருங்கி வரும் காட்சிகளைக் கண்டார்கள். அவர்களுக்கும் اَلَاۤ اِنَّ نَصۡرَ اللّٰهِ قَرِیۡبٌ *('அலா இன்ன நஸ்ரல்லாஹி கரீப்'.* கேட்டுக்கொள்ளுங்கள்: அல்லாஹ்வின் உதவி அண்மையில் உள்ளது என்ற) இதுவே இறையறிவிப்பாகக் கூறப்பட்டது; அவர்கள் அதனை செயலளவில் காணவும் செய்தார்கள். நாமும் இந்தக் காட்சிகளை கண்டிருக்கிறோம்; கண்டு வருகிறோம்; இனிமேலும் கண்டு கொண்டிருப்போம். ***இன்ஷா அல்லாஹ்.***

அல்லாஹ் கூறுகிறான்:

اَمَّنۡ یُّجِیۡبُ الۡمُضۡطَرَّ اِذَا دَعَاهُ وَ یَکۡشِفُ السُّوۡٓءَ وَ یَجۡعَلُکُمۡ خُلَفَآءَ الۡاَرۡضِ ؕ ءَاِلٰهٌ مَّعَ اللّٰهِ ؕ قَلِیۡلًا مَّا تَذَکَّرُوۡنَ ؕ

**(அம்மய் யுஜீபுல் முழ்தர்ர இஸா தஆஹு வயக்ஷிஃபுஸ் ஸூஅ வயஜ்அலக்கும் குலஃபாஅ ஃபில் அர்ழ். அஇலாஹும் மஅல்லாஹ். கலீலம்மா தஸக்கரூன்.)** அதாவது, ''துன்பத்திற்காளானவர், அவனிடம் பிரார்த்தனை செய்யும்போது அவர்(டைய வேண்டுதலு)க்குப் பதிலளித்து (அவரது) தீங்கை அகற்றி (வேண்டுதல் புரியும்) உங்களை இப்பூமி முழுவதற்கும் வாரிசுகள் ஆக்குபவன் எவன்? (இத்தகு ஆற்றல் பெற்ற) அல்லாஹ்வுடன் வேறு கடவுள் உண்டா? நீங்கள் அறவே உணர்வதில்லை.''*(திருக்குர்ஆன் 27:63).*

இது தொடர்பாக **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''அல்லாஹ் மிகவும் தன்னிறைவுத்தன்மை கொண்டவன் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். அதிகம் அதிகமாகவும், மீண்டும் மீண்டும் துடித்தவாறு துஆக்கள் செய்யப்படாதவரை அவன் பொருட்படுத்துவதில்லை. பாருங்கள். ஒருவர் நோயுற்றால் அல்லது அவரது குழந்தை நோயுற்றால், அல்லது கடுமையான வழக்கு வந்து விட்டால் அவற்றிற்காக அவர் எவ்வளவு துடிதுடிக்கின்றார்? எனவே துஆவிலும் உண்மையான துடிப்பும், மன்றாடுதலும் உருவாகாத வரை அது முற்றிலும் விளைவற்ற, அறிவற்ற வேலையாகும். **அம்மன்ய் யுஜீபுல் முழ்தர்ர இஸா தஆஹு வயக்ஷிஃபுஸ் ஸூஅ** (துன்பத்திற்காளானவர், அவனிடம் துஆ செய்யும்போது அவருடைய வேண்டுதலுக்குப் பதிலளித்து அவரது தீங்கை அகற்றுபவன் எவன்?)எனக் கூறியது போன்று**(துஆ) ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு துடிப்பு இருப்பது நிபந்தனையாகும்.''** *(தஃப்ஸீர் தொகுதி 3 பக்கம் 574)*

எனவே நாம் நமது இறைவணக்கங்களிலும், துஆக்களிலும் முன்னரை விட அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது; துடிப்பையும்,மன்றாடலையும் உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது; அல்லாஹ்வின் கருணையை ஈர்க்க வேண்டியதிருக்கிறது. இப்போது நான் சில துஆக்களின் பக்கமும் கவனமூட்ட விரும்புகிறேன். அது முன்னர் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நூற்றாண்டிற்காக ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் *(ரஹிமஹுல்லாஹ்)* அவர்கள் கூறியிருந்தார்கள். **அந்த துஆக்களை மறக்கக் கூடாது; குறைக்கவும் கூடாது; அவற்றை தொடர்ந்து செய்து வர வேண்டும். அவற்றை நிரந்தரமாக உங்கள் வாழ்வின் அங்கமாக மாற்ற வேண்டும்.** பிறகு உங்கள் தொழுகைகளையும், இறைவணக்கங்களையும் அழகுபடுத்தியும், உரிய முறையிலும் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் துஆக்களுக்கென்று இருக்கும் உரிமையையும் நிறைவேற்ற முடியும்.

அந்த துஆக்களை நான் நினைவூட்டுவதற்காகக் கூறுகிறேன். அவற்றில் முதலில் **சூரா ஃபாத்திஹா** ஆகும். அதனை அதிகமாக ஓத வேண்டும். இரண்டாவது நாம் தொழுகையில் ஓதுகின்ற **சலவாத்** ஆகும். அந்த சலவாத்தை அதிகமாக ஓதுங்கள். பிறகு ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறையறிவிப்பின் மூலமாகக் கற்றுக் கொடுக்கப்பட்ட, سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ **(சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ சுப்ஹானல்லாஹில் அழீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்வ் வஆலி முஹம்மத்)** என்ற துஆவை அதிகமாக ஓதுங்கள். ஒரு நபிமொழியில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இரண்டு சொற்கள் நாவினால் கூறுவதில் மிகவும் எளிதானவை; ஆனால் எடையைப் பொருத்தவரை அவை மிக கனமானவை. மேலும் ரஹ்மானாகிய இறைவனுக்கு மிகவும் பிடித்தமானவை. அந்த சொற்கள்: சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ சுப்ஹானல்லாஹில் அழீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்வ் வஆலி முஹம்மத் என்பதாகும். *(புகாரி, முஸ்லிம், திர்மஸி, இப்னுமஜா, முஸ்னது அஹ்மது)*

பிறகு, رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ **(ரப்பனா லா துஸிக் குலூபனா பஅத இஸ் ஹதய்த்தனா வஹப்லனா மின்ல் லதுன்க ரஹ்மா.இன்னக அன்த்தல் வஹ்ஹாப்)** என்பதாகும். எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர், எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவயாக. நிச்சயமாக நீயே வாரிவழங்குபவனாவாய். *(திருக்குர்ஆன் 3:9).* ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னாரின் மகள் ஹஸ்ரத் முபாரகா பேகம் சாஹிபா அவர்களுக்கு ஹஸ்ரத் (அலை) அவர்கள் **ரப்பனா லா துஸிக் குலூபனா** என்ற இந்த துஆவை அதிகமாக செய்யுமாறு கனவில் வலியுறுத்திக் கூறினார்கள். இதை ஹஸ்ரத் முபாரகா சாஹிபா அவர்கள் **ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (அலை) அவர்களுக்கு எடுத்துக் கூறும்போது அவர்கள், 'இனி நான் இதனை ஓதுவதை ஒருபோதும் விட மாட்டேன்; அதிகமாக ஓதுவேன் எனக் கூறினார்கள்.** மேலும் இந்த துஆ ஈமான் உறுதியாக இருப்பதற்கு அல்லாஹ்விடம் வேண்டுதலாக இருக்கின்ற அதே நேரத்தில் இது கிலாஃபத் அமைப்புடன் இணைந்திருப்பதற்கும் மிகப் பெரும் துஆவாகும்.

பிறகு இன்னொரு துஆவும் இருக்கிறது. அதன் பக்கமும் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அதாவது, رَبَّنَآ اَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَّثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ **(ரப்பனா அஃப்ரிக் அலைனா ஸப்ரன்வ் வஸப்பித் அக்தாமனா வன்ஸுர்னா அலல் கவ்மில் காஃபிரீன்.)** பொருள்: 'எங்கள் இறைவா! எங்களுக்கு சகிப்புத்தன்மையை வழங்குவாயாக. எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக. நிராகரிப்பாளர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக.' *(திருக்குர்ஆன் 2:251).* பிறகு اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ **(அல்லாஹும்ம இன்னா நஜ்அலுக ஃபீ நுஹூரிஹிம் வநவூஸு பிக மின் ஷுரூரிஹிம்)** என்ற துஆவாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதாவதொரு சமுதாயத்திடமிருந்து அபாயத்தை உணர்ந்தால் அவர்கள் இந்த துஆவை செய்வார்கள் என ஓர் அறிவிப்பில் வருகிறது. *(அபூதாவூது ஹதீஸ் எண்:1314)* பொருள்: 'அல்லாஹ்வே! நீயே அவர்களின் வாழ்வின் தொடர் முடிந்துவிடும் அளவிலான தாக்குதலை அவர்களின் மீது புரிவாயாக.' ( அவர்களை முடித்து விடுவாயாக.) 'எங்களை அவர்களின் தீங்குகளிலிருந்து உனது பாதுகாப்பில் எடுத்துக் கொள்வாயாக.'

பிறகு اَسْتَغْفِرُ اللهَ رَبِّيْ مِنْ كُلِّ ذَنْبٍ وَّاَتُوْبُ اِلَيْهِ **(அஸ்தக்ஃபிருல்லாஹ ரப்பீ மின் குல்லி ஸன்பின் வஅதூபு இலைஹி)** என்ற துஆ. அவ்வாறே ஒரு கனவின் அடிப்படையில் நான் رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ **ரப்பி குல்லு ஷய்யின் காதிமுக்க. ரப்பி ஃபஹ்ஃபழ்னீ வன்ஸுர்னீ வர்ஹம்னீ** என்ற துஆவை அதிகமாக ஓதுங்கள் எனக் கூறியிருந்தேன்.

பிறகு رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْٓ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ **(ரப்பனக்ஃபிர்லனா ஸுனூபனா வஇஸ்ராஃபனா ஃபீ அம்ரினா வஸப்பித் அக்தாமனா வன்ஸுர்னா அலல் கவ்மில் காஃபிரீன்)** என்ற துஆவையும் சேர்த்துக் கொள்ளுங்கள். பொருள்: எங்கள் இறைவா! எங்கள் குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்கள் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக. எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிப்பவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. *(திருக்குர்ஆன் 3:148).*

இது மட்டுமின்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறையறிவிப்பின் மூலமாக கற்றுத் தரப்பட்ட இன்னொரு துஆ இருக்கிறது. அதையும் மிகவும் அதிகமாக ஓத வேண்டிய தேவை இருக்கிறது. பகைவர்கள் தமது (பகைமையில்) உச்ச கட்டத்தை அடைந்து விட்டனர். எனவே

நாமும் துஆ செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

நான் எனது ஜமாஅத்திற்காகவும் பிறகு காதியானுக்காவும் துஆ செய்து கொண்டிருந்தேன். அப்போது, வாழ்வின் அலங்காரத்தினால் வெகுதூரம் விலகிச் சென்று விட்டனர் என இறையறிவிப்பு வந்தது. பிறகு **ஃபஸஹ்ஹிக்ஹும் தஸ்ஹீகா** அதாவது நீர் இவர்களை நன்றாக அரைத்து விடுவீராக என இறையறிவிப்பு வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அரைத்து விடுவதைப் பற்றி என் மூலமாக ஏன் கூறப்பட்டது என எனது உள்ளத்தில் தோன்றியது. அதற்குள் ஓர் ஆண்டு காலமாக நான் செய்து வந்த அந்த துஆவின் பக்கம் என் பார்வை பட்டது. அது பைத்துத் துஆவில் எழுதப்பட்டுள்ளது. அந்த துஆ:

يَا رَبِّ فَاسْمَعْ دُعَائِيْ وَمَزِّقْ أَعْدَائَكَ وَأَعْدَائِيْ وَأَنْجِزْ وَعْدَكَ وَانْصُرْ عَبْدَكَ أَرِنَا أَيَّامَكَ وَشَهِّرْ لَنَا حُسَامَكَ وَلَا تَذَرْ مِنَ الْكَافِرِيْنَ شَرِيْراً

**(யா ரப்பி ஃபஸ்மஃ துஆயீ. வ மஸ்ஸிக் அஃதாயிக வ அஃதாயீ. வன்ஜுஸ் வஃதக. வன்ஸுர் அப்தக. அரினா அய்யாமக. வஷஹ்ஹிர் லனா ஹுஸாமக. வலா தஸர் மினல் காஃபிரீன ஷரீரா)** என்பதாகும். இதன் பொருள்: ‘என் இறைவா! நீ எனது துஆவைக் கேட்பாயாக. உனது எதிரிகளையும், எனது எதிரிகளையும் துண்டு துண்டாக்குவாயாக. மேலும் உனது வாக்குறுதியை நிறைவேற்றுவாயாக. மேலும் உனது அடியாருக்கு உதவி செய்வாயாக. மேலும் எங்களுக்கு உனது நாளைக் காட்டுவாயாக. மேலும் எங்களுக்காக உனது வாளை உருவுவாயாக. மறுப்பவர்களில் எந்த கடுமையானவரையும் விட்டு வைக்காதே.’ ஆக இந்த துஆக்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது.

இப்போது நான் இன்று மிகவும் அன்புள்ள தூய மனம் கொண்ட நன்றியுள்ள மக்களுக்கு பயனுள்ளவராகத் திகழ்ந்த பல அரிய நற்பண்புகளைக் கொண்ட **டாக்டர் மஹ்தி அலி கமர் சாஹிப்** அவர்களைப் பற்றிய நல்ல விஷயங்களைக் கூறுவேன். **அவரை 26, மே 2014 அன்று ரப்வாவில் ஷஹீதாக்கி விட்டனர்.** சம்பவம் என்னவென்றால், இவர் அதிகாலை ஏறக்குறைய 5 மணிக்கு ரப்வாவிலுள்ள பெஹிஷ்தி மக்பரா சென்று கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத இரண்டு பேர் பைக்கில் வந்து தாருல் ஃபஸ்லுக்கு அருகில் சுட்டு ஷஹீதாக்கி விட்டனர். 11 குண்டுகள் பாய்ந்தன. அதனால் சம்பவ இடத்திலேயே அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். டாக்டர் சாஹிப் அவர்கள் ஃபைஸ்லாபாதிலுள்ள கோகோவால் குடும்பத்தை சேர்ந்தவராவார். இவரது குடும்பத்தில் இவருடைய தந்தை சவுத்ரி ஃபர்ஸிந்த் அலி சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் நிலைநாட்டப்பெற்றது. இவர் தந்தை இளமையின் ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தார். சவுத்ரி சாஹிபின் பைஅத்திற்குப் பிறகு ஷஹீதுடைய பெரிய தந்தை சவுத்ரி அல்லாஹ் தத்தா சாஹிப் பைஅத் செய்தார். பிறகு இந்த குடும்பம் ரப்வாவிற்கு மாறிச் சென்றது. டாக்டர் சாஹிப் ஷஹீது அவர்களின் தாய்வழிப் பாட்டனாராகிய மாஸ்டர் ஸியாவுத்தீன் அவர்கள் 1974 ல் (பாகிஸ்தானிலுள்ள) சர்கோதா ஸ்டேஷனில் சுட்டு ஷஹீதாக்கப்பட்டார்.

டாக்டர் மஹ்தி அலி கமர் சாஹிப் ஷஹீது 23, செப்டம்பர் 1963 அன்று ரப்வாவில் பிறந்தார்கள். டாக்டர் சாஹிப் பிறந்த **அன்றுதான் கமருல் அன்பியா ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மரணம் ஏற்பட்டது. இதனைப் பொருத்தமாகக் கொண்டுதான் ஷஹீதின் தந்தை இவருடைய பெயருடன் *கமர்* என்ற சொல்லை இணைத்தார்கள்.** அவ்வாறே டாக்டர் சாஹிபின் தாய்வழிப் பாட்டனாராகிய மாஸ்டர் ஸியாவுத்தீன் சாஹிப் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்களுடைய பெயரின் ஒரு பகுதியான பஷீருத்தீன் என்பதையும் இணைத்தார்கள். இவ்வாறு **இவருடைய பெயர் மஹ்தி அலி பஷீருத்தீன் கமர் என்றாகி விட்டது**. டாக்டர் சாஹிப் அவர்கள் ஆரம்பக் கல்வியை ரப்வாவிலுள்ள தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்திலும், கல்லூரியிலும் கற்றார்கள். மிகவும் அறிவுள்ள, ஞானமுள்ள மாணவர்களைச் சேர்ந்தவாக விளங்கினார். பிறகு பஞ்சாப் ஃபைஸ்லாபாதிலுள்ள மருத்துவக் கல்லூரியில் மருத்துவக் கல்வியை கற்றார்கள். அங்கு கல்வி கற்றபோது அஹ்மதிய்யத்தின் காரணமாக மாணவர்கள் அதிகமாக எதிர்த்தனர். இவரின் நூல்களையும் பொருள்களையும் எரித்து விட்டனர். அதன் காரணமாக கொஞ்ச காலம் அவர் ரப்வா திரும்பி வந்து விட்டார். பிறகு நிலைமை நன்றாக ஆனபோது மீண்டும் சென்று கல்வியைத் துவக்கினார்கள். **MBBS** தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். 1989 லிருந்து ஜூலை 1991 வரை 2 ஆண்டுகள் ரப்வாவிலுள்ள ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் தொண்டு செய்து

வந்தார்கள். பிறகு தனது தாயாருடன் கனடா சென்றார்கள். கனடாவில் மருத்துவக் கல்விக்கான தேர்வுகளில் தேர்ச்சி பெற்றார். **Tahir Heart Institute** நிறுவப்பட்ட பிறகு மருத்துவர்கள் தேவை என்ற திட்டத்தை நான் வைத்தபோது இவரும் வக்ஃபே ஆர்ஸியில் வந்திருந்தார். அதற்கு முன்பும் இரண்டு முறை வந்திருந்தார். தற்போது மூன்றாவது முறையாக வந்திருந்தார்.

ஜமாஅத் அளவிலுல் இவருக்கு பல துறைகளில் பணிபுரியும் நல்வாய்ப்பு கிடைத்தது. மிகவும் நளினமான தன்மையையும், மென்மையான பண்பையும் கொண்டிருந்தார். அனைவரிடமும் அநுதாபத்துடன் நடந்து கொண்டார். அனைவரின் துக்கத்திலும் வேதனையிலும் கலந்து கொண்டார். எவரிடமும் ஒருபோதும் சண்டை சச்சரவு செய்ததில்லை; முகம் சுளித்ததில்லை.

**டாக்டர் சாஹிபின் மனைவி கூறுகிறார்:**

என்னிடமும் எல்லையற்ற முறையில் மென்மையாக நடந்து கொண்டார்கள். எல்லா வகையிலும் மனதுக்கு ஆறுதல் அளித்து வந்தார்கள். தவறுகளை எப்போதும் கண்டும் காணாமல் இருந்து வந்தார்கள். குழந்தைகளுக்கு மிகவும் பரிவுள்ள, கருணையுள்ள தந்தையாகத் திகழ்ந்தார்கள். குழந்தைகளுக்கான நல்ல தர்பிய்யத், கல்வி ஆகியவற்றை எப்போதும் கருத்தில் கொண்டிருந்தார்கள்.

**இவருடைய மாமியார் கூறுகிறார்:**

நான் இவருடன் 5 ஆண்டுகள் அமெரிக்காவில் இருந்தேன். ஒருபோதும் உரத்த குரலில் பேசியதில்லை. எப்போதும் தனது தாயைப் போன்று எனக்கு கண்ணியமும் மதிப்பும் கொடுத்து வந்தார். விருந்தோம்பல் செய்வது இவருடைய பெரும் தொண்டாக இருந்தது. ஏழைகளுக்கும் தேவையுடையவர்களுக்கும் அதிகமாக உதவி செய்து வந்தார்.

இவர் இலக்கியத்திலும் கவிதையிலும் ஆர்வம் கொண்டவராக இருந்தார். கிலாஃபத்துடன் இவருக்கு அதிக நேசமும் ஆழிய தொடர்பும் இருந்தது. அதிகமாக சந்தா கொடுத்து வந்தார். கொலம்பஸ் மஸ்ஜிதுக்காக ஒரு பெரும் தொகையை வழங்கினார். அவ்வாறே தனது சொந்த ஊரிலுள்ள தாருர் ரஹ்மத் மஸ்ஜிதுக்காகவும் அதிக தொகையை வழங்கியுள்ளார். தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட்டிற்காகவும் அன்பளிப்புகளை வழங்குவதில் முன்னணியில் இருந்தார். மார்க்கத்தைப் பற்றி படிக்கும் ஆர்வமும் அதிகமாக இருந்தது. நல்ல இறை அழைப்பாளராக விளங்கினார். **You Tube** – ல் அஹ்மதி அல்லாதவர்களின், ஆட்சேபணை செய்பவர்களின் ஆட்சேபணைகளுக்கு நன்றாக பதிலளிப்பதில் சுறுசுறுப்பாக விளங்கினார். இவர்களின் உறவினர்களில் மனைவி ஜனாபா வஜீஹா மஹ்தி மற்றும் 15 வயதைக் கொண்ட அப்துல்லாஹ் அலி, 7 வயதைக் கொண்ட ஹாஷிம் அலி, 3 வயதைக் கொண்ட அஷர் அலி ஆகிய மூன்று மகன்கள் இருக்கின்றனர். 3 வயதைக் கொண்ட இந்த மகன் இவருக்கு குண்டு பாய்ந்தபோது உடனேயே இருந்தான்.

இவருடைய கவிதைகளின் சில உதாரணங்களை எடுத்துக் கூறுகிறேன்.28 மார்ச் 2014 அன்று இவர் கூறிய இரண்டு நஸ்ம்களில் உள்ள கவிதை வரிகள் இவையாகும்:

''வாழ்வைப் பெறுவதற்கான விஷயங்களை மரணத்தின் முன்னாலேயே பேசுவோம் நாங்கள்; யஸீது இயல்பைக் கொண்ட எவரும் உண்மையை அழித்து விட முடியாது. அல்லாஹ் மற்றும் ரஸூலின் விஷயங்களைத் தவிர எல்லா விஷயங்களும் அழிந்து விடும்.''

கிலாஃபத்தைப் பற்றி அவர் எழுதிய ஒரு கவிதை:

உண்மையான அருளாளன் நமக்கு வாழ்வின் பானத்தை அருந்தக் கொடுத்தான். கிலாஃபத்துடன் வாழ்வின் அமைப்பை இணைத்து விட்டான்.''

ஷஹீது மஹ்தி அலி சாஹிபின் **தம்பி ஹாதி அலி சாஹிப்** முபல்லிக் ஆவார். அவர் **கூறுகிறார்:**

எங்கள் சகோதரர் மிகவும் அசாதாரணமான மனிதராக இருந்தார். அவருடைய பிரிவு முழு குடும்பத்திற்கும் மிகப் பெரும் துக்கமாகும். எனினும் நாங்கள் அல்லாஹ்வின் திருப்தியில் உண்மையான உள்ளத்துடன் திருப்தி கொண்டுள்ளோம். மர்ஹூம் மஹ்தி அலி சாஹிப் அவர்களின் **Email** (மின்னஞ்சலி) ல் ***'கூலூ லின்னாஸி ஹுஸ்னா' (மக்களிடம் இனிமையாகப் பேசுங்கள் திருக்குர்ஆன் 2:84)*** என்ற சொற்கள் எழுதப்பட்டிருந்தன.

**இவருடைய சகோதரி கூறுகிறார்:** சிறு வயதிலிருந்தே மிகவும் அன்பான, சிந்தனையுள்ள

இயல்புக்கு சொந்தக்காரராக விளங்கினார். வீணானவற்றிலிருந்து எப்போதும் விலகி இருந்தார். மிகவும் ஆர்வத்துடனும் முறைப்படியும் தொழுகையை நிறைவேற்றி வந்தார். சிறு வயதிலிருந்தே கிளை அமைப்பின் சுறுசுறுப்பான தொண்டராக இருந்தார். சிறுவராக இருக்கும்போதே மக்களை சுப்ஹ் தொழுகைக்கு எழுப்புவதற்காக *சல்லி அலா* என ஓதி வந்தார்கள்.

கிலாஃபத்துடன் இவருக்கு அதிகமான அன்பு இருந்தது. நான் 2012 - ல் அமெரிக்கா கொலம்பஸுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது இரவு முழுக்க விழித்திருந்து இவர் மஸ்ஜிதை அலங்கரித்துக் கொண்டிருந்தார். அதனை பாதுகாத்துக் கொண்டிருந்தார். இரவு முழுக்க மஸ்ஜிதில் பணி செய்து விட்டு காலையில் மருத்துவமனை பணியையும் முழுமையாக நிறைவேற்றினார். மேலும் பள்ளிவாயிலின் அலங்கரிப்புக்காக என்ன செலவு வந்தாலும் அதை அவர் தன் சார்பாகவே கொடுத்து வந்தார். பள்ளிவாயிலில் அவர் வேலை செய்யும்போது இவ்வளவு பெரிய டாக்டர் என எவரும் நினைத்ததில்லை. மிகவும் எளிமையான முறையில் தமது வேலையை செய்து வந்தார்கள்.

**டாக்டர் சுல்தான் முபஷ்ஷிர் சாஹிப் கூறுகிறார்:** மர்ஹூம் சென்ற ஆண்டு வந்து வங்கியில் கணக்கைத் திறந்து என்னிடம், நான் பணத்தை சேமித்துள்ளேன். அவற்றிலிருந்து தேவையுடையவர்களுக்கு செலவு செய்யுங்கள் எனக் கூறினார். ஒருமுறை தொலைபேசியில் அழைத்து ஜமாஅத்தின் முன்னாள் இன்ன பணியாளர் தற்போது பணியில் இல்லை; ஓய்வு பெற்று விட்டார். அவர் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்; அவருக்கு பணம் தேவைப்படும். அவருக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து விடுங்கள் எனக் கூறினார். அவ்வாறே மருத்துவக் கல்லூரியில் படிக்க விரும்பும் மாணவர்களுக்கான செலவு முழுவதையும் நான் ஏற்றுக் கொள்வேன் எனக் கூறினார்.

**அவருடைய ஒரு நண்பர் கூறுகிறார்:** எங்களுடன் அவருக்கு பெரிய சகோதரர்களைப் போன்ற தொடர்பு இருந்தது. இந்த ஆண்டு சனிக்கிழமை இரவு ரப்வா வந்ததும் என்னை உடனே வருமாறு கூறினர். இரவு 10 மணியாக இருந்தது; நான் ஓய்வெடுப்பதாகக் கூறினேன். ஆனால் அவர், இல்லை; இப்போதே வாருங்கள் என்றார். சந்தித்தோம். பிறகு எனக்காகக் கொண்டு வந்த ஒரு பெரிய **Stethoscope** (ஸ்டெதோஸ்கோப்) ஐ அன்பளிப்பாகக் கொடுத்தார். இரவு 11:15 மணி வரை பேசிக் கொண்டிருந்தோம். பிறகு நான் விடை பெற்றுச் சென்று விட்டேன். பிறகு சில மணி நேரத்திலேயே காலை பெஹிஷ்தி மக்பரா சென்றபோது இவர் ஷஹாதத்தின் பானத்தை அருந்தி விட்டார்.

**Dawn** பத்திரிகையின் வலைதளத்தில் டாக்டர் சாஹிபின் ஷஹாதத் பற்றியும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிர்ப்பு பற்றியும் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது: டாக்டர் மஹ்தி அலி கமர் சாஹிப் ஒன்றும் சாதாரண டாக்டர் அல்ல. அவர்கள் **American college of Cardialogy** (அமெரிகன் காலெஜ் ஆஃப் கார்டியாலெஜி) யிலிருந்து விருதைப் பெற்றுள்ளார்கள். மேலும் 2003, 2004 ல் அமெரிக்காவின் மிகச் சிறந்த **Physicians** (ஃபிஸிஷன்ஸ்) ல் இவர் இடம்பெற்றிருக்கிறார். அது மட்டுமின்றி, தொடர்ந்து 2005,2006,2007 ஆகிய 3 ஆண்டுகளிலும் தொடர்ந்து 2009,2010, 2011, 2012 ஆகிய 4 ஆண்டுகளிலும் அமெரிக்காவின் மிகச் சிறந்த **Cardialogists** (கார்டியாலஜிஸ்ட்) ல் சேர்ந்தவராக இருந்தார். மேலும் அவருக்கு அமெரிக்கா மெடிகல் அசோஷியேஷன் சார்பாக **Physician Recognition Award** (ஃபிஸிஷன் ரெகக்னேஷனுக்கான விருது) ம் கிடைத்தது. பிறகு பத்திரிகையாளர் எழுதுகிறார்: நான் இணையதளத்தில் மஹ்தி சாஹிபின் ஒரு ப்ரோஃபைலில் அவருடைய புன்சிரித்த ஒளிமிக்க படத்தைப் பார்த்தேன். அத்துடன் அவர் கீழ்வரும் சொற்களை எழுதியிருந்தார்:

''நான் மிக உன்னதமான (மருத்துவத்) தொழிலின் உயர் தகுதியை நிலைநாட்டியவாறு நோயாளிகளை மிகச் சிறந்த முறையில் கவனிக்க முடியும் எனவும் நான் சார்ந்திருக்கின்ற இந்த (மருத்துவ) த் துறைகளின் முன்னேற்றத்திற்கு உதவியாளனாக நிரூபணமாக முடியும் எனவும் உறுதியாக நம்புகிறேன்.'' கடைசியில் எழுதுபவர் இவ்வாறு எழுதுகிறார்: டாக்டர் மஹ்தி அலி கமர் அவர்களே! நான் தங்களைக் காப்பாற்ற முடியவில்லை. அதற்காக நான் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் நான் இந்த கொடுமைக்கு எதிராக குரல் கொடுத்திருகின்றேன். எனது வேண்டுகோள் கேட்கப்படாத நிலையில், நான் பிற்காலத்தில் மரணிக்காதிருப்பதற்காக நான் (உம் மீது இழைக்கப்பட்ட கொடூரத்திற்கு எதிராக இவ்வாறு குரல் கொடுத்து) எனது அமைதியை அபாயத்தில் போட்டு விட்டேன்.

**பாகிஸ்தான், அமெரிக்கா, கனடா, பிரித்தானியா மற்றும் உலகின் பல்வேறு**

**பத்திரிகைகள் மிகவும் மிருகத்தனமான இந்த கொலையைப் பற்றி கண்டனம் தெரிவித்துள்ளது. 30க்கும் மேற்பட்ட பத்திரிகைகளில் இந்த செய்தி வெளிவந்துள்ளது**. அந்த பத்திரிகைகளில் டாக்டர் மஹ்தி அலி கமர் ஷஹீது அவர்கள் மிருகத்தனமாக கொல்லப்பட்டது குறித்து கண்டனம் தெரிவித்திருந்தது மட்டுமல்லாமல், அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றிய அறிமுகத்தையும் சென்ற பல ஆண்டுகளாக நடக்கின்ற பலவந்தம், தீவிரவாதத்தை பற்றியும் மிகவும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அனைத்து பத்திரிகைகளும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்ததுடன், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயர், நபித்துவ வாதம், மஸீஹிய்யத் வாதம் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றன. அத்துடன் அஹ்மதிய்யா ஜமாஅத் அமைதியை விரும்பும் ஒரு ஜமாஅத் என்றும், ஜிஹாது என்ற பெயரில் அநீதிக்குள்ளானவர்களை கொலை செய்வதை கண்டிக்கின்றது என்பதையும் அவை குறிப்பிட்டுள்ளன. மேலும் பல பத்திரிகைகள் ஜமாஅத்தின் வெற்றிகரமான செயல்களைப் பாராட்டியும் உள்ளன. எனவே இந்த ஷஹீது தனது உயிரைக் கொடுத்தும் தப்லீகிற்கான புதிய வழிகளைத் திறந்து விட்டுள்ளார். மேலும் உலகிற்கு ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகத்தை செய்து விட்டுச் சென்றுள்ளார். உலகின் மிகப் பரந்த அளவில் வெளியிடப்படும் வால் இஸ்ட்ரீட் ஜெனரல் எனும் அமெரிக்க பத்திரிகையின் தலையங்கம் எழுதுபவர், **Human Rights Commission of Pakistan Chairman** ன் ஆய்வைக் குறிப்பிட்டார். அதாவது பாகிஸ்தானில் எல்லா சிறுபான்மையினரும் அநீதிக்குள்ளாகி இருக்கின்றனர். எனினும் அஹ்மதிய்யா ஜமாஅத் மிகவும் கடினமான அநீதிக்குள்ளாகி இருக்கிறது. பாகிஸ்தானிலுள்ள உள்ளூர் பத்திரிகைகள் அஹ்மதிகளுக்கெதிராக தீவிரவாதத்தை தூண்டும் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. கிறித்தவ சகோதரருக்கு எதிராக ஏதாவதொரு தீவிரவாத சம்பவம் நடந்தால் நாட்டின் பிரதமர் தாமே வருத்தம் தெரிவித்தவாறு பாதிக்கப்பட்டவர்களை சந்திக்கச் செல்கின்றார். ஆனால் அஹ்மதிகளுக்கெதிராக நிற்பவர் எவரும் இல்லை.''

ஹுஸூர் கூறினார்கள்: அஹ்மத்களுக்கெதிராக இறைவன் நிற்கின்றான்; அவன் இனி மேலும் நிற்பான். மொழிபெயர்த்து எழுதுபவர் ஷஹீதுடன் பணி புரிந்த டாக்டர் ஷான்தினி சின்ஹா அவர்களிடமும் பேட்டி எடுத்தார். டாக்டர் சின்ஹா ஷஹீது அவர்களிப் பற்றி, நான் எனது வாழ்க்கையில் இவரை விட அதிகமாக நேர்மையானவரை, நன்றாக நடந்து கொள்பவரை, நல்லொழுக்கமுள்ளவரை கண்டதில்லை. அவருடைய உள்ளத்தில் அணுவளவும் தீங்கு இருந்ததில்லை. பாகிஸ்தான் செல்வதால் தம்முடன் அப்படி ஒரு சம்பவம் நடக்கலாம் என அவர் அறிந்திருந்தார். அப்படி இருந்தும் அவர் மக்கள் தொண்டிற்காக அங்கு சென்றார்எனக் குறிப்பிட்டார்.

எப்படி இருந்தபோதிலும் இந்த ஷஹீது தமது வாழ்விலும் வெற்றிகளைக் கண்டு கொண்டிருந்தார். மக்களுக்கு தொண்டு செய்து கொண்டிருந்தார். அல்லாஹ்விடம் அவருக்கு நிரந்தர வாழ்வை அளிக்கக் கூடிய மரணத்தைப் பெற்றார்.அல்லாஹ் அவருக்கு சுவர்க்கத்தில் உயர்ந்த பதவியை வழங்குவானாக. ஒவ்வொரு வினாடியும் அவரது பதவிகள் உயர்ந்து கொண்டே செல்லட்டுமாக.

அல்லாஹ் அவரது மனைவி, குழந்தைகளையும் தனது பாதுகாப்பில் வைத்தருள்வானாக. நமது முன்னேற்றங்களுக்கும் எதிரிகளை வெற்றிகொள்வதற்கும் மிகப் பெரும் ஆயுதம் துஆதான் என நான் கூறி வந்திருக்கிறேன். ஆயினும் அல்லாஹ் நமக்கு வெளிப்படையான காரணிகளை பயன்படுத்துமாறும் கவனமூட்டியிருக்கின்றான். முடிந்த வரை அதுவும் நடக்க வேண்டும். எனவே **இந்த சம்பவத்திற்குப் பிறகு ரப்வாவில் பாதுகாப்புப் பணியில் முன்னரை விட அதிகமாக சுறுசுறுப்புடனும்,எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டிய தேவை இருக்கிறது**. நமது திட்டங்களை அதன் எல்லை வரை எட்ட வைத்த பிறகு அல்லாஹ்விடம் விஷயத்தை விட்டு விடுங்கள். அடுத்து, இந்த அன்பிற்குரிய ஷஹீது ரப்வாவில் இரத்தம் சிந்தி நமக்கு துஆக்கள் மற்றும் திட்டங்களின் பக்கம் கவனமூட்டியிருக்கிறார். உலகத்தின் அஹ்மதிகளும் பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள்.

அநீதியிழைக்கும் இவர்களுக்கு எதிராக அல்லாஹ்வின் நியதி கண்டிப்பாக செயல்படும். அப்போது இவர்களின் பெயரும் அடையாளமும் எஞ்சியிருக்காது. அநீதியிழைப்பவர்களும் எஞ்சியிருக்க மாட்டார்கள்; அநீதிக்கு தஞ்சம் கொடுப்பவர்களும் எஞ்சியிருக்க மாட்டார்கள். எனவே நாம் அதிகமாக துஆ செய்ய வேண்டும். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் ஷஹீது மர்ஹூமிற்கான ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன் - இன்ஷாஅல்லாஹ்.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***